# கதை சொன்னவர் கதை

குழந்தைக் கவிஞர்
அழ.வள்ளியப்பா



தமிழ் நிலையம்
புதுக்கோட்டை.

# Kathai Sonnavar Kathai - Book I

**The Story of the Story - Tellers**



| | | |
|---|---|---|
| **Author** | : | **AL. VALLIAPPA** |
| **Illustrator** | : | **SAGAR** |
| **Publisher** | : | **TAMIL NILAYAM, PUDUKKOTTAI.** |
| **Printer** | : | **JEEVAN PRESS, MADRAS - 5.** |
| **Second Edition** | : | **MAY, 1962.** |
| **Price** | : | **Re. 1/-** |

விலை ரூபாய் ஒன்று

JEEVAN PRESS, MADRAS-5. (620)

# ஆசிரியர் கூறுகிருர்

'கதை' என்று சொன்னதுமே, சிறுவர்களின் மலர் முகங்களில் மகிழ்ச்சி தாண்டவமாடுகிறது. இனிக்க இனிக்க அவர்களுக்குக் கதை சொல்லி இன்பம் பெற்ற பாட்டிமார்களின் எண்ணிக்கைக்குத்தான் கணக்குண்டா? பரம்புரை பரம்பரையாக வந்த கதைகளைத் தான் காது வழியாகக் கேட்டு, வாய் வழியாகப் பேரக் குழந்தைகளுக்குப் பாட்டிமார் கூறிவந்தார்கள்.

இங்ஙனம் கூறப்பட்டுவந்த கதைகளை, 'அழிந்து போகாமல் காப்பாற்றவேண்டுமே' என்ற ஆசையில் அவற்றையெல்லாம் திரட்டித் தொகுத்தார்கள் சிலர். தாங்களாகவே சில கதைகளைக் கற்பனைசெய்து, அவற்றைக் குழந்தைகளிடத்திலே கூறிவந்தார்கள் வேறு சிலர். இன்னும் சிலர், அவ்வப்போது பல கதைகளை நாட்டு மக்களிடம் கூறி, அவர்களை நல்வழிப் படுத்திவந்தார்கள்.

இவ்வாறு கூறப்பட்டுவந்த கதைகள் அந்தந்த நாட்டு எல்லைகளைக் கடந்து, மலைகளைக் கடந்து, கடல்களைக் கடந்து உலகமெங்கும் பரவி, ஆங்காங்கே யுள்ள குழந்தைகளுக்கு மகிழ்ச்சி ஊட்டி வருவதை இன்று நாம் காண்கின்ருேம். சாகாவரம் பெற்ற அக் கதைகளைத் தந்த ஆசிரியர்களைப் பற்றிக் குழந்தைகள் அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இந்த நோக்கத்துடனே குழந்தைகள் விரும்பும் கதைகளைச் சொல்லிய பன்னிரண்டு கதாசிரியர்களைப் பற்றி எழுத நினைத்தேன். 'கங்கை' இதழில் தொடர்ந்து எழுதினேன். ஒவ்வொரு கதாசிரியரின் வாழ்க்கையும்

அவர் சொல்லிய ஒரு கதையுடன் தொடங்குகிறது. அவர்களது கதைகளைப் போலவே, அவர்களது வாழ்க்கை வரலாறுகளும் சுவையாக இருக்கின்றன.

'இவையனைத்தையும் ஒரே புத்தகமாக வெளியிடுவதைவிட, மூன்று புத்தகங்களாக வெளியிட்டால் குழந்தைகள் படிப்பதற்கு மிகவும் எளிதாயிருக்குமே' என்று கருதினார் தமிழ் நிலைய அதிபர் திரு. வெ. சுப. நடேசன் அவர்கள். அவர் விருப்பப்படியே புத்தகத்துக்கு நான்கு கதாசிரியர்கள் வீதம் வெளியிட இசைந்தேன். இப் புத்தகத்தைத் தொடர்ந்து இரு புத்தகங்கள் வெளிவருகின்றன.

கடந்த பதினைந்து ஆண்டுகளாகக் குழந்தைகளுக்காகப் பத்திரிகைகளையும், புத்தகங்களையும் வெளியிட்டுப் பல பதிப்பகத்தாருக்கும் வழிகாட்டியாயுள்ள தமிழ் நிலைய அதிபர் அவர்களுக்கும், என்னை அடிக்கடி தூண்டி இந்தக் கட்டுரைகளை எழுதச்செய்த 'கங்கை' ஆசிரியர் திரு. பகீரதன் அவர்களுக்கும், நல்ல முறையில் படங்கள் வரைந்து தந்த ஓவியர் திரு. சாகர் அவர்களுக்கும் நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

நல்லநல்ல கதைகளைக் குழந்தைகளுக்குக் கூறி அவர்களுக்கு இன்பம் ஊட்டி, தாமும் இன்பம் பெற்ற அப்பெரியார்களைப் பற்றிக் கூறுவதிலே நானும் இன்பம் பெறுகின்றேன். குழந்தைகளும் இவற்றைப் படித்து இன்பம் பெற வேண்டுமென ஆசைப்படுகின்றேன்.

சென்னை - 17
30 — 5 — '61

அழ. வள்ளியப்பா

# புகழ் தேடிப் புறப்பட்டவர்!



வெகு காலத்திற்கு முன்பு ஒரு சக்கரவர்த்தி இருந்தார். அவர் அடிக்கடி உடை மாற்றுவார். ஒவ்வொரு தடவையும் வெவ்வேறு விதமான உடை அணிவார். துணி வாங்குவதிலும், துணி தைப்பதிலுமே பணத்தையெல்லாம் செலவிட்டு வந்தார்.

அந்தச் சக்கரவர்த்தியிடம் ஒருநாள் இரண்டு பேர் வந்தார்கள். அவர்கள் இருவரும் பிறரை ஏமாற்றிப் பிழைப்பவர்கள். ஆனால், பார்ப்பதற்கு நல்லவர்கள் போல நடித்தார்கள். அவர்கள் சக்கரவர்த்தியைப் பார்த்து, "நாங்கள் நெசவாளர்கள். நாங்கள் தயார் செய்யும் துணி மிகமிக மெல்லிய தாயிருக்கும். வண்ணங்கள் கண்ணைக் கவரும். இன்னொரு அதிசய சக்தியும் அதற்கு உண்டு

புத்திசாலிகளின் கண்களுக்குத்தான் அந்தத் துணி தெரியும்; முட்டாள்களின் கண்களுக்குத் தெரியவே தெரியாது !'' என்றார்கள்.

சக்கரவர்த்தி அவர்கள் சொன்னதை உண்மை என்று நம்பிவிட்டார். அவருக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. உடனேயே, ''சரி, உங்களுக்குத் தனியாக ஒரு வீடும், வேண்டிய பணமும் தரச் சொல்லுகிறேன். நீங்கள் உங்கள் வேலையை ஆரம்பிக்கலாம்'' என்றார்.


அவர்களுக்குத் தனியாக ஒரு வீடும், ஏராளமான பணமும் தரப்பட்டன. அவர்கள் அந்த வீட்டிலே இரண்டு தறிகளைக் கொண்டுவந்து வைத்தனர். ஆனால் துணி நெய்யவில்லை; நெய்வது போல் பாசாங்கு செய்தனர்.

சில நாட்கள் சென்றன. சக்கரவர்த்தி தம்முடைய முதல் மந்திரியை அழைத்து, துணிகள் எப்படித் தயாராகின்றன என்று பார்த்து வரச் சொன்னார். முதல் மந்திரி அந்த இரண்டு பேர்வழிகளும் இருந்த வீட்டுக்குச் சென்றார். அவரைக் கண்டதும், இருவரும் துணி நெய்வது போல் நடித்தனர்.

மந்திரியின் கண்களுக்குத் துணி எதுவும் தெரியவில்லை. ஆனாலும், அவர் அதை வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. 'துணி தெரியவில்லையே' என்று சொன்னால் 'முட்டாள் பட்டம்' கிடைத்து விடுமே! ஆகையால், அவர், ''ஆஹா ! எவ்வளவு

மெல்லிய துணி! அற்புதமான வர்ணங்கள்!" என்று புகழ்ந்து கூறிவிட்டு, சக்கரவர்த்தியிடம் திரும்பி வந்தார். அவரிடமும் அதிசயத் துணியைப் பற்றி ஒரேயடியாக வர்ணிக்கத் தொடங்கி விட்டார்.

இரண்டு நாள் கழித்து, சக்கரவர்த்தி இன்னெரு பெரிய உத்தியோகஸ்தரை அனுப்பிவைத்தார். அவரும் அங்கே சென்று பார்த்தார். அவருடைய கண்ணுக்கும் துணி எதுவும் தெரிய



வில்லை. ஆனாலும், அவர் விட்டுக் கொடுக்க வில்லை. சக்கரவர்த்தியிடம் திரும்பி வந்து, 'பார்க்காத துணி'யைப் பற்றிப் பலவாருகப் புகழ்ந்து பேசினர்.

சக்கரவர்த்திக்கு அளவில்லாத மகிழ்ச்சி.

உடனே துணியைப் பார்ப்பதற்கு அவரே நேராகப் புறப்பட்டுச் சென்றார். அவரைக் கண்டதும், மிகவும் மும்முரமாகத் துணி நெய்வதுபோல் இருவரும் நடித்தார்கள். சக்கரவர்த்தி எவ்வளவுதான் கூர்ந்து பார்த்தும், துணி தெரியவில்லை. அங்கே இருந்தாலல்லவா தெரிவதற்கு? ஆனாலும், உண்மையைக் கூற அவருக்குத் துணிச்சல் இல்லை. "ஆஹா! அற்புதம்! அபாரம்! பிரமாதம்! துணி என்றால் இதுவல்லவா துணி!" என்று வாய்விட்டுக் கூறினார்.

"இந்தத் துணியிலே தங்களுக்கு அழகான ஆடை தைக்கப் போகிறோம். ஆடை தயாரானதும் அதைத் தாங்கள் அணிந்து இந்த நகரில் ஊர்வலம் வர வேண்டும்" என்றார்கள் அந்தப் பொல்லாதவர்கள்.

சக்கரவர்த்தியும் 'சரி' என்றார். ஒரு நல்ல நாள் பார்த்து அன்று ஊர்வலம் நடத்துவது என்று முடிவு செய்தார்கள்.

குறித்த நாளில் சக்கரவர்த்தி துணி தயாராகும் வீட்டுக்கு வந்தார். நெசவாளராய் நடித்த இருவரும் சக்கரவர்த்தி அணிந்திருந்த உடைகளைக் கழற்றினார்கள். பிறகு அவர்களில் ஒருவன் கால்சட்டையைப் போட்டுவிடுவது போல் பாசாங்கு செய்தான்; மற்றொருவன் மேல்சட்டையைப் போட்டுவிடுவது போல் நடித்தான். சிறிது நேரத்தில், "ஆஹா! எவ்வளவு அழகாயிருக்கிறது! சக்கரவர்த்திக்கு மிகவும் பொருத்த

மான உடை!" என்று அவர்கள் கூறினர்கள். பிறகு ஊர்வலம் புறப்பட்டது.

சக்கரவர்த்தி ஊர்வலமாக வருவதை தெருவில் எல்லோரும் பார்த்தார்கள். "ஐயோ! ஆடையின்றி வருகிருரே" என்று ஒருவராவது சொல்ல வேண்டுமே! அதுதான் இல்லை. ஏன்? அந்த ஆடை யார் யார் கண்களுக்குத் தெரியவில்லையோ அவர்களெல்லாம் முட்டாள்கள் என்ற செய்திதான் ஏற்கெனவே நகர் முழுவதும் பரவி விட்டதே! அதனால் சில 'புத்திசாலிகள்', "அடடா! அடடா! துணியென்ருல் இதுவல்லவா துணி! எவ்வளவு அற்புதமாயிருக்கிறது!" என்று புகழவும் ஆரம்பித்து விட்டனர்.

இப்படி எல்லோரும் 'புத்திசாலி'களாக நடித்துக் கொண்டிருந்த அச் சமயத்தில் திடீரென்று ஒரு கீச்சுக் குரல் கேட்டது.

"ஐயையோ! சக்கரவர்த்தி உடுப்பு இல்லாமல் போகிருரே!"



குரல் வந்த திசையில் எல்லோரும் பார்த்தார்கள். ஒரு சின்னஞ்சிறு பெண்தான் அப்படிக் கத்தினாள். அவள் கூறியதைக் கேட்டதும், "எனக்குக் கூட அப்படித்தான் தோன்றுகிறது" என்றார் கூட்டத்திலிருந்த ஒருவர். இன்னொருவரும் அதே மாதிரி சொன்னார். சில விநாடிகளில், எல்லோரும் சேர்ந்து, "சக்கரவர்த்திக்கு உடுப்பே இல்லையே!" என்று ஒரே குரலில் கூவினர்!

சக்கரவர்த்தி அப்போதுதான் உண்மையை உணர்ந்தார். வெட்கத்தால் தலை குனிந்தார். அத்துடன் ஊர்வலமும் முடிந்தது.

—இது குழந்தைகளுக்காகக் கூறப்பட்ட கதை. குழந்தைகளுக்கு இது வேடிக்கையாக இருக்கும். ஆனால், பெரியவர்களுக்கோ உயர்ந்த கருத்தைப் போதிக்கும்.

இதைப் போல் ஒன்றல்ல; இரண்டல்ல; நூற்றுக் கணக்கான கதைகளைக் கூறினார் ஒருவர். அவர் பெயர்தான் ஆண்டர்சன். 'ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சன்' என்பது அவருடைய முழுப் பெயர். ஆண்டர்சன் எங்கே போனாலும், குழந்தைகளைக் கூட்டி வைத்துக்கொண்டு கதை சொல்லத் தொடங்கி விடுவார். இப்படி ஆயிரக் கணக்கான குழந்தைகள் அவருடைய கதைகளை அவர் வாயாலே கேட்டிருக்கிறார்கள். லட்சக் கணக்கான குழந்தைகள் அவருடைய கதைகளைப் படித்துப் படித்து மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியிருக்கிறார்கள்.

ஆனால், அவருடைய சொந்தக் குழந்தைகள் அவரிடம் கதை கேட்டதும் இல்லை ; அவருடைய கதைகளைப் படித்ததும் இல்லை. காரணம், அவருக்குக் குழந்தையே கிடையாது ! ஆமாம், அவருக்கு மனைவியும் இல்லை ; மக்களும் இல்லை. அவர்தான் திருமணமே செய்து கொள்ளவில்லையே !

ஆண்டர்சன், டென்மார்க் தேசத்திலுள்ள ஓடென்ஸ் என்ற ஊரில் 1805-ஆம் ஆண்டில் பிறந்தார். அவருடைய அப்பா செருப்புத் தைப்பவர்; அம்மா துணி வெளுப்பவள். தங்களுடைய பிள்ளை பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காகப் போய்ப் படித்து முன்னுக்கு வரவேண்டும் என்று அப்பாவும் அம்மாவும் ஆசைப் பட்டார்கள். ஆனால், ஆண்டர்சனுக்குப் படிப்பில் கவனம் செல்லவே இல்லை. அவர் எப்போதும் ஏதாவது கனவு கண்டு கொண்டே யிருப்பார். இதனால், அவர் பள்ளிப் படிப்புக்கு விரைவில் முழுக்குப் போடவேண்டியதாயிற்று !

ஆண்டர்சனுக்கு, அவருடைய அப்பா ஒரு பொம்மை நாடக மேடையைச் செய்து கொடுத்திருந்தார். ஆண்டர்சன் பல பொம்மைகளை நடிகர்கள் போல் அந்த மேடையில் நிற்க வைப்பார். சும்மா நிற்கவைக்க மாட்டார் ; தையற் கடையிலிருந்து பொறுக்கி வந்த துண்டுத் துணிகளைக் கொண்டு அவற்றிற்கு உடை தைத்துப் போட்டு, நிற்க வைப்பார். அந்த நடிகர்களுக்கு நாடகம்

வேண்டாமா ? நாடகத்தையும் ஆண்டர்சனே தயார் செய்வார். பல வகையான நாடகங்களை அவர் கற்பனை செய்வார். நாடகத்திற்கு வேண்டிய கதை, வசனம், பாட்டு எல்லாவற்றையும் அவரே எழுதுவார். அந்த நடிகர்களுக்குப் பதிலாக அவரே பேசியும் பாடியும் உணர்ச்சி ததும்ப நடிப்பார். இதனால், அவரது கற்பனை கொஞ்சம் கொஞ்சமாக வளர ஆரம்பித்தது.

ஆண்டர்சனின் அப்பா செருப்புத் தைப்பவராயிருந்தாலும், ஓய்வு நேரத்தில் புத்தகங்கள் படித்துக்கொண்டேயிருப்பார். சில சமயங்களில் ஆண்டர்சனை அருகில் வைத்துக் கொண்டு, சில நல்ல நல்ல கதைகளையும், நாடகங்களையும் படித்துக் காட்டுவார். ஆண்டர்சன் நாடகத்திலுள்ள வசனத்தையெல்லாம் மனப்பாடம் செய்து விடுவார். அப்படி அவர் மனப்பாடம் செய்ததைத் தெருவில் நடக்கும்போதெல்லாம் சொல்லிப் பார்ப்பார். இதனால், தெருவில் போவோர் வருவோரெல்லாம் 'இவன் என்ன, தனக்குத் தானே பேசிக் கொள்ளுகிறனே ! பைத்தியமோ !' என்று நினைப்பார்கள்.

ஆண்டர்சனுக்கு வயது 14 ஆயிற்று. இதற்குள் அவருடைய அப்பா காலமாகிவிட்டார். " இனிமேல் இந்த ஊரில் இருந்தால் சரிப்படாது. தலை நகருக்குப் போக வேண்டும் " என்று ஆண்டர்சன் ஆசைப்பட்டார். உடனே தாயிடம் சென்றார். டென்மார்க்கின் தலைநகராகிய கோபன்

ஹேகனுக்குப் போகவேண்டும் என்ற ஆசையை வெளியிட்டார்.

"அங்கே போய் என்ன செய்வாய்?" என்று கேட்டாள் ஆண்டர்சனின் அம்மா.

"புகழ் சம்பாதிக்கப் போகிறேன்" என்ருர் ஆண்டர்சன்.

உடனே அம்மா சிரித்தாள். "எல்லோரும் பொருள் சம்பாதிக்கப் போவார்கள். நீ புகழ் சம்பாதிக்கப் போகிருயா?" என்று கேட்டாள்.

"ஆமாம் அம்மா. நிச்சயம் புகழ் சம்பாதிப்பேன். இன்று என்னைப் பார்த்துக் கேலி செய்கிருர்களே, அவர்களெல்லாம் அன்று என்னைப் பார்த்து வியப்படையப் போகிருர்கள். இது நிச்சயம் அம்மா. இப்போது எனக்கு அனுமதி கொடு அம்மா" என்று கெஞ்சினுர்.

அம்மா முதலில் சம்மதிக்கவில்லை. ஆண்டர்சன் தொடர்ந்து வற்புறுத்தவே, அம்மா ஒருநாள், "சரி, போய் வா" என்று அனுமதி கொடுத்துவிட்டாள்.

ஆண்டர்சன் தலைநகருக்குப் போவதற்குப் பணம் வேண்டுமே, என்ன செய்வது? அவர் கையிலே கிடைக்கும் சில்லறைக் காசுகளை யெல்லாம் ஒரு களிமண் உண்டிப் பெட்டிக்குள் போட்டுவைப்பார். அந்தப் பெட்டியை உடைத்து உள்ளே யிருந்த காசுகளை யெல்லாம் எண்ணிப்

பார்த்தார். பத்து ரிக்ஸ் டாலர் (சுமார் 20 ரூபாய்) இருந்தது. அந்தப் பணத்துடன் புறப்பட்டு விட்டார்.

ஆண்டர்சனுடன் ஓர் அம்மையாரும் பிரயாணம் செய்தார். அவர், 'தன்னந் தனியாக ஒரு சிறுவன் இருக்கிருனே' என்று நினைத்து, "தம்பி, நீ எங்கே போகிருய் ?" என்று கேட்டார்.

"தலை நகருக்குப் புகழ் சம்பாதிக்கப் போகிறேன்" என்ருர் ஆண்டர்சன்.

"எப்படிப் புகழ் சம்பாதிப்பாய்?" என்று கேட்டார் அந்த அம்மையார்.

"நடிகனுவேன். மிக மிகப் பெரிய நடிகனுவேன். கூடிய சீக்கிரத்தில் புகழ் பெற்றுவிடுவேன்" என்று துடுக்காகப் பதிலளித்தார் ஆண்டர்சன். ஆண்டர்சனின் மன உறுதியைப் பாராட்டினுர் அந்த அம்மையார்.

ஊரைவிட்டுப் புறப்படும் போது, அங்கிருந்த ஓர் அச்சகத்தாரிடமிருந்து ஆண்டர்சன் ஒரு கடிதம் வாங்கி வந்தார். கோபன் ஹேகனிலுள்ள புகழ் பெற்ற ஒரு நடிகையிடம் கொடுக்க வேண்டிய சிபார்சுக் கடிதமே அது. ஆண்டர்சன் நேராக அந்த நடிகையிடம் சென்ருர். கடிதத்தைக் கொடுத்தார். கிழிந்த உடையுடன் வந்த ஆண்டர்சனைப் பார்த்ததும் அவள், "உனக்கு நன்ருக நடிக்கத் தெரியுமா ?" என்று கேட்டாள்.

"ஓ, தெரியுமே! இதோ பாருங்கள்" என்று கூறி, உடனே தம் காலில் அணிந்திருந்த செருப்பைக் கழற்றி ஒரு பக்கமாக வைத்தார்; தலையில் மாட்டியிருந்த தொப்பியைக் கையில் எடுத்துப்



பிடித்துக் கொண்டார். ஆடிப் பாடி நடிக்கத் தொடங்கிவிட்டார். நடிப்பைக் கண்டு அந்த நடிகை தம்மைப் பாராட்டுவாள் என்று ஆண்டர்சன் எதிர்பார்த்தார். ஆனால், அவள் ஏளனமாகச் சிரித்தாள். "பையனுக்கு மூளைக் கோளாறே!" என்று நினைத்தாள்.

“நீங்கள் எப்படியாவது எனக்கு உதவிசெய்ய வேண்டும்” என்று ஆண்டர்சன் மன்றாடிக் கேட்டுக் கொண்டார்.

“இப்போது ஒன்றும் நிச்சயமாகச் சொல்ல முடியாது” என்று அவள் கூறிவிட்டாள். பாவம், ஆண்டர்சன் ஏமாற்றத்துடன் திரும்பிவிட்டார்.

கையிலுள்ள பணமெல்லாம் கரைந்து விட்டது. ஆண்டர்சனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. ஊருக்குத் திரும்பி விடலாமா என்றுகூடத் தோன்றியது. “சேச்சே, புகழ் சம்பாதிக்காமல் திரும்புவதா? கூடாது. கூடவே கூடாது” என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டார்.

ஆண்டர்சனுடைய குரல் மிகவும் இனிமையாக இருக்கும். “தம்பி, உன் குரல் நன்றாயிருக்கிறது. முயற்சி செய்தால் நல்ல பாடகனாகலாம்” என்று சிலர் யோசனை கூறினார்கள்.

ஒருநாள் அந்த நகரில் இருந்த புகழ்பெற்ற ஒரு பாடகர் வீட்டுக்கு ஆண்டர்சன் சென்றார். அவரை நேரில் பார்த்து, அவரிடம் தம்முடைய விருப்பத்தைக் கூறினார். உடனே, அவர் ஆண்டர்சனைப் பாடச் சொன்னார். ஆண்டர்சன் இனிமையாகப் பாடினார். அதைக் கேட்ட அவர், “தம்பி, நீ என் வீட்டிலே இருக்கலாம். சாப்பாடு துணிமணியெல்லாம் நான் தருவேன்” என்றார். ஆண்டர்சனுக்கு அளவில்லாத மகிழ்ச்சி. விரைவில் புகழ் சம்பா

தித்து விடலாம் என்று நினைத்துப் பூரிப்படைந் தார்.

பாடகர் ஆண்டர்சனுக்குத் தினமும் சங்கீதம் கற்றுக் கொடுத்து வந்தார். ஆண்டர்சனும் கருத் தாய்க் கற்றுக் கொண்டார். ஆயினும், ஆண்டர் சனின் துர்அதிர்ஷ்டம் அங்கே அதிக நாள் இருக்க முடியவில்லை. காரணம், அவருடைய குரல் பதி னைந்தாவது வயதில் மாறி விட்டது. அதில் இனிமை இல்லை. கேட்கவே சகிக்கவில்லை. "இனி நீ இங்கே இருப்பதில் பயனில்லை. பேசாமல் ஊருக் குத் திரும்பிப் போய்விடு" என்று அந்தப் பாடகர் புத்திமதி கூறினர்.

ஆண்டர்சனுக்கு ஊருக்குத் திரும்ப மன மில்லை. ஆனாலும், பாடகருடைய வீட்டைவிட்டு வெளியேறி விட்டார்.

"இனி, நம்மால் நடிகனுகவே முடியாதோ? சரி...போகட்டும்... ஆனாலும், நான் சும்மா இருக் கப் போவதில்லை. பெரிய நாடகாசிரியனுக, சிறந்த கவிஞனுக வேண்டும்" என்று முடிவு செய்தார் ஆண்டர்சன்.

சிறு வயதிலே பொம்மை நாடக மேடையில் பொம்மை நடிகர்களை நிற்க வைத்து, அவர்களுக் காக வசனமும், பாட்டும் எழுதியதை நினைத்துக் கொண்டார். அந்த அனுபவம் அவருக்குப் பெரி தும் உதவியது. நாடகங்களும், பாடல்களும் எழுதத் தொடங்கினர். அவற்றை விலைகூறிப்

பார்த்தார்; வாங்குவதற்கு ஆள் இல்லை. அன்றாடச் சாப்பாட்டுக்கே திண்டாட்டமாயிருந்தது.

அப்போது, காலின் என்னும் ஒரு பெரியவரை ஆண்டர்சன் சந்தித்தார். ஆண்டர்சன் தாம் எழுதிய நாடகங்களையும், கவிதைகளையும் அவரிடம் காட்டினார். அவர் எல்லாவற்றையும் படித்துப் பார்த்தார். எல்லாம் நன்றாகவே இருந்தன. ஆனாலும், அவற்றில் எழுத்துப் பிழைகளும், இலக்கணப் பிழைகளும் ஏராளமாயிருந்தன. ஆண்டர்சனை ஒரு நல்ல பள்ளிக்கூடத்தில் சேர்த்துப் படிக்க வைத்தால், அவருக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்று காலின் நினைத்தார். அன்றே ஆண்டர்சனைப் பள்ளிக் கூடத்தில் சேர்க்க ஏற்பாடு செய்தார். 18 வயது ஆண்டர்சன் 8 வயதுப் பிள்ளைகளுடன் உட்கார்ந்து படிப்பதென்றால் எப்படி இருக்கும் ? சிறிய வயதில் சரியாகக் கல்வி கற்காமல் போனோமே என்று நினைத்து, ஆண்டர்சன் வருந்தினார். ஆனாலும், பொறுமையுடன் படித்தார். விடா முயற்சி அவருக்கு வெற்றி தேடித் தந்தது.

பள்ளிக்கூடத்தில் சேர்ந்த ஐந்தாண்டுகளில், ஆண்டர்சன் எழுதிய புத்தகம் ஒன்று வெளி வந்தது. அவர் எழுதிய நாடகங்களில் ஒன்றும் மேடையில் நடிக்கப்பட்டது.

அதற்குப் பிறகு, ஆண்டர்சன் சில நாவல்களை எழுதினார். நாவல், நாடகம், கவிதை முதலிய பல துறைகளிலும் அவர் ஈடுபட்டார். அவை

யெல்லாம் அவருக்கு ஓரளவுதான் புகழ் தேடித் தந்தன. ஆயினும், அவருக்கு உலகப் புகழ் தேடித் தந்தவை அவரது குழந்தைக் கதைகளே! ஆம், ஓய்வு நேரத்தில் குழந்தைகளைக் கூட்டி வைத்துக் கொண்டு அவர் சொன்ன கதைகள்தாம் அவருக்குப் பெரும் புகழ் தேடித் தந்தன!

குழந்தைகளுக்கு மத்தியிலே உட்கார்ந்து கொண்டு கதை சொல்லுவதிலே ஆண்டர்சனுக்கு ஒரு தனி இன்பம். அவர் கதை சொல்லும்போது, நேருக்கு நேராகக் கதாபாத்திரங்கள் வருவது போல் இருக்குமாம். அபிநயத்துடன் ஆடிப்பாடிக் கொண்டே கதை சொல்லுவாராம். குழந்தைகள் அந்தக் கதைகளைக் கேட்டுத் துள்ளிக் குதிப்பார்களாம்.

வெகு விரைவில் அவருடைய குழந்தைக் கதைகள் புத்தகங்களாக வெளிவந்தன. புத்தகங்களாக வெளி வந்ததோடு அக்கதைகள் பல நாடுகளுக்கும் பரவத் தொடங்கின. கதைகளுடன் ஆண்டர்சனின் புகழும் பரவியது.

டென்மார்க் தேச அரசாங்கத்தார் ஆண்டர்சனுக்குப் பணம் கொடுத்து ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி முதலிய நாடுகளைச் சுற்றிப் பார்க்க ஏற்பாடு செய்தார்கள். அந்த நாடுகளுக்கு அவர் போவதற்கு முன்பே அவருடைய கதைகள் அங்கே போய்ச் சேர்ந்துவிட்டதால், அவருக்கு அமோகமான வரவேற்புக் கிடைத்தது. புகழ்

ஏற ஏற, நிறைய நிறையக் கதைகளை அவர் எழுதினர்.

அவர் காலத்திற்குள் மொத்தம் 156 கதைகள் புத்தகங்களாக வெளி வந்தன. ஆனால், அந்தக் கதைகளை ஆரம்பத்தில் படங்கள் இல்லாமலே வெளியிட்டார்கள். அந்தப் புத்தகங்களைப் பார்த்த டென்மார்க் தேசத்துப் பதிப்பாளர் ஒருவர், 'இந்தக் கதைகளைப் படங்களுடன் வெளியிட்டால், குழந்தைகள் மேலும் குதூகலம் அடைவார்களே !' என்று நினைத்தார். ஆனால் படங்கள் போடுவதற்கு ஓவியர் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை ஆண்டர்சனிடமே அப் பதிப்பாளர் ஒப்படைத்தார். ஆண்டர்சன் விருப்பப்படி 'வில்ஹ்ற பாடர்சன்' என்ற ஓவியர் படங்கள் வரைந்தார். அவர் வரைந்த படங்கள் சுமார் 200 இருக்கலாம். அவை யாவுமே மிகவும் நன்முக இருந்தன. பலரும் அவற்றைப் பாராட்டினார்கள்.

ஆண்டர்சன் அன்னையிடம் கூறியது வீண் போகவில்லை. அழியாப் புகழ் சம்பாதித்துக் கொண்டுதான் அவர் ஊர் திரும்பினர். அவர் திரும்பி வந்தபோது அந்த ஊர் மக்கள் அவருக்கு எத்தகைய வரவேற்பு அளித்தார்கள் ! தெருவெல்லாம் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் ஊர்வலமாகச் சென்றனர். "ஆண்டர்சன்—வாழ்க! ஆண்டர்சன்—வாழ்க!" என்ற ஒலி வானைப் பிளந்தது.

மறுநாள், அங்கிருந்த எல்லாப் பள்ளிக் கூடங்களுக்கும் விடுமுறை! நகர மண்டபத்

திலே கோலாகலமான வரவேற்பு நடந்தது. மேய ரும், நகரசபை அங்கத்தினர்களும் கைகுலுக்கி அவரை வரவேற்ருர்கள். மேயர் ஆண்டர்சனை வரவேற்றுப் பேசினுர். மக்களெல்லாம் மண்ட பமே அதிரும்படி கைதட்டி ஆரவாரம் செய் தார்கள்.

உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் அவ ருக்கு வாழ்த்துத் தந்திகள் வந்து குவிந்தன. பல நாட்டுக் குழந்தைகளும் அவருக்குப் பரிசுகள் அனுப்பியிருந்தார்கள்.

அன்று இரவு அவரை கௌரவிப்பதற்காக ஒரு பெரிய விருந்து நடந்தது. விருந்து முடிந்த தும், அவரை விருந்து மண்டபத்தின் ஒரு ஜன்னல் அருகே அழைத்துச் சென்ருர்கள். ஆண்டர்சன் ஜன்னல் வழியாக வெளியே பார்த்தார். எங்கே பார்த்தாலும் பிரகாசமான விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. ஆண்டர்சனுக்கு மரியாதை செய்யவே அப்படி விளக்குகளை ஏற்றி வைத் திருந்தனர். விளக்குகளின் ஒளியைக் கண்டு அவர் மனம் குளிர்ந்தார்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு யாரைப் பார்த்துக் கேலி செய்தார்களோ, அவருக்குத் தான் இப்படி ராஜ மரியாதை நடந்தது!

ஆண்டர்சனின் புகழ் நாளுக்கு நாள் வளர்ந் தது. அவரது கதைகள் உலகெங்கும் பரவின. இதுவரை சுமார் 120 மொழிகளில் அவரது

கதைகள் வெளிவந்திருக்கின்றன. வண்ண ஓவியங்களுடன் அழகழகான பதிப்புக்கள் ஆயிரக் கணக்கில் வெளிவந்திருக்கின்றன; இன்னும் வெளிவந்துகொண்டே யிருக்கின்றன !

ஓடென்ஸ் நகரிலே ஆண்டர்சன் பிறந்த வீடு இப்போது ஒரு கலைக்கூடமாக விளங்குகிறது. ஆண்டர்சனின் கையெழுத்துப் பிரதிகள், கடிதங்கள், இன்னும் அவர் சம்பந்தப்பட்ட புகைப் படங்கள், சித்திரங்கள் முதலியவற்றையெல்லாம் திரட்டி அங்கு ஒரு காட்சியாக வைத்திருக்கிறார்கள். அவற்றுடன், இதுவரை வெளிவந்துள்ள ஆண்டர்சனின் கதைப் புத்தகங்களையும் ஆண்டர்சனைப் பற்றி எழுதப்பட்ட புத்தகங்களையும் சேகரித்து வைத்திருக்கிறார்கள். அந்த நகருக்குச் செல்வோர் அங்கே சென்று அவற்றைப் பார்க்காமல் திரும்ப மாட்டார்கள் !






நகரத்தின் மத்தியிலே ஒரு மண்டபம் இருந்தது. அந்த மண்டபத்தில் அடிக்கடி ஏதேனும் வேடிக்கையான நிகழ்ச்சிகள் நடைபெறும்.

ஒருநாள், ஒரு கோமாளி அந்த மண்டபத்தில் பற்பல வித்தைகளைச் செய்து காட்டிக்கொண்டிருந்தான். மக்கள் எல்லோரும் மகிழ்ச்சியுடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"இப்போது நான் பன்றியைப் போல் கத்தப் போகிறேன்" என்று கூறிவிட்டு, அந்தக் கோமாளி கீழே குனிந்தான். 'ஈக், பீக், ஈக், பீக்' என்று கத்தினான்.

அவன் கத்தியதைக் கேட்டதும், சிலர், "அடடா! அசல் பன்றி மாதிரியே கத்துகிறானே!"

என்று வியந்தனர். மற்றவர்களும், "ஆமாம், ஆமாம். நிஜப் பன்றி கத்துவது போலவே கத்து கிறுன்!" என்று ஆமோதித்தனர். அப்புறம் கேட்கவேண்டுமா? எல்லோரும் கைதட்டி ஆரவா ரம் செய்தனர். மீண்டும் மீண்டும் அதே வித்தை யைச் செய்து காட்டச் சொன்ஞர்கள். கோமாளி யும் திரும்பத் திரும்ப அதே மாதிரி கத்திக் கொண்டே யிருந்தான்.

அப்போது, அந்தக் கூட்டத்தில் ஒரு குடி யானவன் இருந்தான். அவனுக்குப் பன்றியைப் பற்றி நன்ருகத் தெரியும். அவன் திடீரென்று இடத்தைவிட்டு எழுந்தான். நேராக மேடைக்குச் சென்ருன்.

"சபையோர்களே, இந்தக் கோமாளி பன்றி யைப் போலவா கத்துகிறுர்? இல்லவே இல்லை. எந்தப் பன்றியும் இப்படிக் கத்தாது. அசல் பன்றி யைப் போல் இதே மண்டபத்தில் நாளைக்கு நான் கத்திக் காட்டுகிறேன்" என்று சொன்னுன்.

சபையோர் கூச்சலிட்டுக் குடியானவனை அவ மானப்படுத்த முயன்ருர்கள். குடியானவன் விட வில்லை. "நாளை இதே நேரத்தில் இந்தக் கோமாளி யும் வரட்டும். நானும் வருகிறேன். இருவரும் இதே வித்தையைச் செய்து காட்டுகிருேம். அப் போதுதான் உண்மையான பன்றி எப்படிக் கத் தும் என்பது உங்களுக்குத் தெரியும்" என்ருன்.

சபையோருக்குக் குடியானவனுடைய பேச் சிலே அவ்வளவாக நம்பிக்கை இல்லை. 'ஏதோ

பைத்தியம் உளறுகிறது' என்று நினைத்தார்கள். ஆயினும், "சரி, நாளை பார்க்கலாம்" என்றார்கள்.

மறுநாள் அந்த மண்டபத்தில் எள் விழக்கூட இடமில்லை. மேடையில் முதலிலே கோமாளி வந்தான். அவன் வந்து நின்றதுமே சபையோர் அவனுக்குக் குதூகல வரவேற்பு அளித்து ஆரவாரம் செய்தனர். அவன் பன்றிபோல் கத்த ஆரம்பித்தான். "ஆஹா! எப்படிக் கத்துகிறான்! பன்றி கூட இவனிடம் பிச்சை வாங்க வேண்டும்!" என்றார்கள் சிலர்.

"அந்தக் குடியானவனுக்குப் பொறாமை அதிகம். இதைவிடத் திறமையாகச் செய்ய முடியுமா?" என்றார்கள் வேறு சிலர்.

கோமாளி கத்தி முடிந்ததும், குடியானவன் மேடைக்கு வந்தான். உடம்பைப் போர்வையால் போர்த்துக்கொண்டு, அவன் மேடையில் வந்து நின்றதும், எல்லோரும் கைகொட்டிக் கேலி செய்தார்கள். ஆனாலும், குடியானவன் கவலைப்படவில்லை. நன்றாகக் கீழே குனிந்து கொண்டான். மறுவினாடி, 'ஈக், பீக், ஈக், பீக்' என்ற குரல் பலமாகக் கேட்டது.

அந்தக் குரலைக் கேட்டதும், சபையோர் ஏளனமாகச் சிரித்தார்கள். "பன்றி இப்படியா கத்தும்? ஏமாற்றப் பார்க்கிறான்!" என்றார்கள்.

"உள்ளே போ, உள்ளே போ" என்று கூச்சலிட்டார்கள்.


குடியானவன் இந்தக் கூச்சலுக்கெல்லாம் பயந்துவிடவில்லை. உள்ளே போகவும் இல்லை. திரும்பத் திரும்ப அதே மாதிரி சப்தம் கேட்கவே, சபையோர் ஒரேயடியாகக் கூச்சலிட்டனர்.

கடைசியாக, குடியானவன் மேலே போர்த்தியிருந்த போர்வையை எடுத்துக் கீழே எறிந்தான். அப்போது அவனுடைய கக்கத்திலே ஒரு சிறிய பன்றி இருந்தது! அந்தப் பன்றியைத் தூக்கி சபையோரிடம் காட்டினான்.

"சபையோரே, இவ்வளவு நேரமாகக் கத்தியது நானல்ல; இதோ இந்தப் பன்றிதான்! இதன் காதைப் பிடித்துத் திருகித் திருகித்தான், நான் இதைக் கத்தும்படி செய்தேன். இந்த உண்மைப் பன்றியைக் காட்டிலும், உங்களுடைய கோமாளி எப்படித்தான் நன்றாகக் கத்துவாரோ!" என்று கேட்டான்.

சபையோருக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. எல்லோரும் தலை குனிந்தார்கள்.

உண்மை எது, போலி எது என்



பதை உணராமல், போலியையே உண்மை என்று சிலர் நம்பி விடுவார்கள். அப்படி மதி மயங்கு வோருக்காகக் கூறப்பட்டதே இந்தக் கதை. இதைக் கூறியவர் யார் தெரியுமா? அவர்தாம் ஈசாப்.

ஈசாப் கதைகள் உலகப் புகழ் பெற்றவை. குழந்தைகள் முதல் 'குடுகுடு' கிழவர்கள் வரை எல்லோரும் படித்துச் சுவைக்கலாம். 'ஓநாயும் ஆட்டுக் குட்டியும்', 'சிங்கமும் சுண்டெலியும்', 'நரியும் திராட்சையும்' போன்ற கதைகளை உலகத்தின் மூலை முடுக்கிலுள்ள குழந்தைகள்கூட அறிவார்கள். கிறிஸ்தவ வேதமான பைபிளுக்கு அடுத்தபடியாக உலகில் அதிகமானவர்கள் படித்து வருபவை ஈசாப் கதைகளே!



ஈசாப் முந்நூறுக்கு மேற்பட்ட கதைகளைக் கூறியிருக்கிறார். எல்லாம் குட்டிக் குட்டிக் கதைகளாகவே இருக்கும். நமது பஞ்சதந்திரக் கதைகளைப் போலவே

பெரும்பாலான கதைகள் மிருகக் கதைகளா யிருக்கும்; அல்லது பறவைக் கதைகளாயிருக்கும். மேலே கூறப்பட்டதுபோல், சிறிது நீளமாகவும், மனிதர்களைப் பற்றியும் அவர் சொன்ன கதை கள் மிகவும் குறைவுதான்.

இப்போது பத்திரிகைகளிலும் புத்தகங்களி லும் நாம் பல கதைகளைப் படிக்கிறோம். ஆனால், ஈசாப் காலத்தில் பத்திரிகையும் கிடையாது; புத் தகமும் கிடையாது. அவர் இந்தக் கதைகளை எதி லுமே எழுதி வைக்கவில்லை.

அவர் தெருவிலே போய்க்கொண்டிருப்பார். அப்போது இருவர் சண்டை போட்டுக் கொள் வார்கள். உடனே, சண்டை போடாதபடி அவர் களைத் தடுப்பார். அங்கேயே அழகான குட்டிக் கதை ஒன்றையும் கூறுவார். கதையைக் கேட்ட தும், சண்டை போட்ட இருவருடைய கோபமும் பறந்துவிடும்; சண்டை போட்டது தவறு என்று அவர்கள் உணருவார்கள்.

இதேபோல் அவர், கதைகளைக் கூறிக் கூறி, நாட்டில் நடந்த கலகங்கள், சண்டைகள் முதலி யவற்றை யெல்லாம் அடக்கியிருக்கிறார். அரசர் களுக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட பல விரோதங் களைத் தீர்த்து வைத்திருக்கிறார். அவ்வப்போது அவர் கூறி வந்த கதைகளை அவர் காலத்தில் இருந்தவர்களும், பின்னால் வந்தவர்களும் வாய் மொழியாகக் கூறி வந்தார்கள்.

அவர் இந்தக் கதைகளை எந்த மொழியில்

கூறினர். தமிழிலா? இல்லை. ஆங்கிலத்திலா? அதுவும் இல்லை. கிரேக்க மொழியில்தான் கூறி வந்தார்: ஆம், அவருடைய தாய்மொழி அது தான். அவருடைய தாய்நாடும் கிரேக்க நாடுதான்!

கிரேக்க நாட்டில், கிறிஸ்து பிறப்பதற்கு 260 ஆண்டுகளுக்கு முன்னர் ஈசாப் பிறந்தார் எனத் தெரிகிறது. ஆனால், அவர் கிரேக்க நாட்டில் எந்த ஊரில் பிறந்தார் என்பது இன்னும் சரியாகத் தெரியவில்லை. கிரேக்க மகாகவி ஹோமரைப் போலவே, ஈசாப் பிறந்த ஊரும் இன்னும் ஆராய்ச்சிக்கு உரியதாகவே இருக்கிறது. 'எங்கள் ஊரில்தான் பிறந்தார்', 'எங்கள் ஊரில்தான் பிறந்தார்' என்று இப்போது ஆறு ஊர்க்காரர்கள் பெருமையாகக் கூறி வருகிறார்கள். ஒருவர் எப்படி ஆறு ஊர்களிலும் பிறந்திருக்க முடியும்? சில ஆராய்ச்சியாளர்கள்,'சாமோஸ்' என்ற ஊரில் தான் ஈசாப் பிறந்திருக்க வேண்டும் என்கிறார்கள்.

ஈசாப் ஆரம்பத்தில் ஓர் அடிமையாகவே இருந்தார். ஆயினும் அதிக காலம் அப்படி இருக்கவில்லை. அவரது கெட்டிக்காரத்தனத்தையும, குட்டிக் கதை சொல்லும் திறத்தையும் கண்டு அவருடைய எஜமானர் அவருக்கு விடுதலை அளித்து விட்டார்.

மனிதர்களுக்கு மனிதர்களைப் பற்றிய கதைகளையே கூறினால், அவர்கள் கோபம் அடையலாம்

அல்லவா? அதனுல்தான் ஈசாப் மிருகங்களையும், பறவைகளையும் பாத்திரங்களாக வைத்தே பெரும் பாலான கதைகளைக் கூறி வந்தார். அவர் கூறிய கதைகளை ஈசாப் இறந்த முந்நூறு ஆண்டுகளுக் குப் பிறகு 'பாப்ரியஸ்' என்ற கிரேக்க ஆசிரியர் ஒருவர் முதல் முதலாகத் தொகுத்து எழுதி வைத் தார். பிறகு லத்தீன், பிரெஞ்சு முதலிய மொழி களிலும் இந்தக் கதைகளைக் கூறி வந்தார்கள்.

பிரெஞ்சிலிருந்து முதல்முதலாக ஆங்கிலத்தில் இந்தக் கதைகளை மொழி பெயர்த்து 1845-ஆம் ஆண்டில் புத்தகமாக வெளியிட்டார்கள். இங்கி லாந்தில் முதல்முதலாக அச்சு இயந்திரத்தை அமைத்த காக்ஸ்டன் என்பவரே அப்புத்தகத்தை அச்சிட்டவர்! அதன் ஒரு பிரதி இப்போதுகூட பிரிட்டிஷ் மியூசியத்தில் கண்ணுடி அறைக்குள் வைக்கப்பட்டிருக்கிறதாம்!

ஈசாப் சொன்ன கதைகளைத் தவிர, ஈசாப்பைப் பற்றிய கதைகள் பல உள்ளன. அவரது புத்தி நுட்பத்தையும், தெளிவான சிந்தனையையும், மக்களிடத்திலே அவர் கொண்டிருந்த மாசற்ற அன்பையும் விளக்கக் கூடியவை அந்தக் கதைகள்.

ஈசாப் அடிமையாயிருந்தபோது, அவருடைய எஜமானர் தம் நண்பர்களிடம் ஒரு பந்தயம் கட்டி ஞர். "சமுத்திரத்திலுள்ள நீர் முழுவதையும் நான்

ஒரே நாளில் குடித்துப் பொட்டலாக்கி விடுவேன். அப்படிச் செய்யாவிடில், என் சொத்து முழுவதும் உங்களுக்குச் சொந்தம்'' என்று குடிவெறியில் கூறிவிட்டார்.

ஆனால், மயக்கம் தெளிந்ததும், தாம் கூறியது எவ்வளவு முட்டாள்தனமானது என்பதை உணர்ந்தார். "இப்போது என்ன செய்வது?" என்று அடிமையாயிருந்த ஈசாப்பைக் கேட்டார்.

ஈசாப் ஒரு நல்ல யோசனை கூறினார். அதன்படி சமுத்திரத்திலுள்ள நீரைக் குடிக்க எஜமானர் ஈசாப்புடன் புறப்பட்டார். மற்றவர்களும் சென்றார்கள்.

சமுத்திரக் கரைக்குப் போனதும், ஈசாப் அங்கு நின்றவர்களைப் பார்த்து, "பெரியோர்களே, எங்கள் எஜமானர் சமுத்திரத்திலுள்ள நீர் முழுவதையும் குடிக்கத் தயார்தான். அவர் சமுத்திரத்திலுள்ள நீரைமட்டுமே குடிப்பதாகக் கூறினார். ஆனால், இப்போது பல ஆறுகளிலிருந்தும் நீர் வந்து சமுத்திரத்தில் விழுந்து கொண்டே இருக்கின்றதே! குடிக்கக் குடிக்கத் தண்ணீர் வந்து விழுந்து கொண்டே இருந்தால், எப்படிக் குடித்துப் பொட்டலாக்குவது? ஆகையால் முதலில் ஆற்று நீர் சமுத்திரத்தில் விழாதபடி, எல்லா ஆறுகளையும் தடுத்து நிறுத்த வேண்டும். நிறுத்தியவுடனே, என் எஜமானர் சொன்னபடி செய்து காட்டுவார்'' என்றார்.

உடனே வேடிக்கை பார்க்க அங்கு வந்திருந்த வர்கள், "ஆமாம், ஆமாம். அதுதான் சரி" என்ருர் கள்.

பந்தயம் போட்டவர்களுக்கு என்ன சொல் வது என்றே தெரியவில்லை. வெட்கத்துடன் திரும்பி விட்டனர்.

இப்படி அவர் பல சந்தர்ப்பங்களில் எஜமான ரைக் காப்பாற்றியிருக்கிருர். அதனுல்தான் அவ ருக்கு விரைவில் விடுதலை கிடைத்தது.

அவர் அடிமையாக இருந்தபோது மற்ருெரு நிகழ்ச்சி நடந்தது.

ஒருநாள் அவருடைய எஜமானர் வெளியூருக் குப் புறப்பட்டார். சாமான்களைத் தூக்கி வருவதற் காகத் தம்முடன் சில அடிமைகளையும் அவர் அழைத்துச் செல்வது வழக்கம்.

அன்று எடுத்துச் செல்ல வேண்டிய சாமான் களை ஈசாப் ஒருமுறை பார்த்தார். பிறகு, மற்ற அடிமைகளைப் பார்த்து, "எனக்கு அதிக கனமில் லாத சுமையைத் தரவேண்டும்" என்று கேட்டார்.

ஈசாப்பிடம் மற்ற அடிமைகளுக்கு எப்போ துமே மதிப்பு உண்டு. ஆகையால் "சரி, உனக்கு வேண்டிய சாமானை எடுத்துக் கொள்" என்ருர் கள்.

உடனே ஈசாப் அங்கிருந்த பெரிய கூடை

ஒன்றை எடுத்துக் கொண்டார். அந்தக் கூடை நிறைய ரொட்டிகள் இருந்தன. அவ்வளவு பெரிய கூடையை ஈசாப் தூக்கிக் கொண்டதும், மற்ற அடிமைகள் சிரித்தார்கள்.

"என்னப்பா இது! கனமில்லாத சுமையாக வேண்டுமென்று கேட்டாய். இவ்வளவு பெரிய கூடையைத் தூக்கிக் கொண்டிருக்கிருயே!" என்று கேட்டார்கள்.

ஈசாப் அப்போது எதுவும் கூறவில்லை.



ஆனல், ஈசாப் முட்டாளல்ல என்பதை அவருடைய நண்பர்கள் வெகு சீக்கிரத்திலே தெரிந்து

கொண்டார்கள். ஈசாப் வைத்திருந்த கூடையி லிருந்த ரொட்டிகளை வேளா வேளைக்கு அவர்கள் எடுத்துத் தின்று வந்ததால், கனம் குறைந்து கொண்டே வந்தது. செல்ல வேண்டிய ஊரை நெருங்கும் போது ஈசாப் வெறும் கூடையுடன் ஆனந்தமாக நடந்து சென்றார். ஆனால் மற்ற வர்கள் அப்படிச் செல்லவில்லை. போகப் போக, சுமையைத் தூக்க முடியாமல் அவர்கள் அயர்ந்து விட்டார்கள்.

அப்போதுதான் மற்றவர்களுக்கு ஈசாப்பின் புத்திசாலித்தனம் தெரிந்தது !

ஈசாப் இருந்த ஊரின் நடுவே ஒரு குளம் இருந் தது. எல்லோரும் அதில்தான் குளிப்பார்கள்.

ஒருநாள் ஈசாப்பின் எஜமானர், ஈசாப்பை அழைத்து, ''நான் குளிக்க வேண்டும். குளத்திலே கூட்டம் அதிகமாக இருக்கிறதா என்று பார்த்து வா'' என்று உத்தரவிட்டார்.

ஈசாப் உடனே சென்று பார்த்தார். அந்தக் குளத்திற்குச் செல்லும் வழியிலே குறுக்காக ஒரு பெரிய கல் கிடந்தது. குளிக்கச் சென்றவர்களில் சிலர் அதைத் தாண்டிக் கொண்டு சென்றார்கள்; சிலர் கல் தடுக்கிக் கீழே விழுந்து, பிறகு எழுந்து சென்றார்கள். ஆனால், ஒருவர்கூட அதை அப்புறப் படுத்தவில்லை.

ஈசாப் இந்தக் காட்சியைச் சிறிதுநேரம் பார்த் துக் கொண்டிருந்தார். அதே சமயம் அங்கு வந்

தார் ஒருவர். அவர் அந்தக் கல்லைத் தூக்கி ஓரமாகப் போட்டுவிட்டுக் குளிக்கச் சென்றார்.

ஈசாப் உடனே தம் எஜமானரிடம் சென்று, "குளத்தில் ஒரே ஒரு மனிதர்தான் குளித்துக் கொண்டிருக்கிறார்" என்று சொன்னார்.

"சரி, நான் போய்க் குளித்துவிட்டு வருகிறேன்" என்று கூறி, எஜமானர் புறப்பட்டார்.

குளத்தங்கரைக்குச் சென்றதும், அங்கு ஏராளமானவர்கள் குளித்துக் கொண்டிருப்பதை எஜமானர் கண்டார். உடனே அவருக்கு ஈசாப்பின் மீது கோபம் கோபமாக வந்தது. வேகமாக வீட்டுக்குத் திரும்பினார். "ஏ ஈசாப், உனக்கு என்ன, கண் பொட்டையா? குளத்தில் எத்தனை பேர் குளிக்கிறார்கள்? ஒரே ஒருவர்தான் குளிக்கிறார் என்றாயே!" என்று சீறினார்.

"ஆமாம் எஜமானரே. அவர் ஒருவர்தான் மனிதர்! வழியிலே கிடந்த கல்லை அப்புறப்படுத்தி, மற்றவர்களை விழாமல் காப்பாற்றிய அவர் ஒருவர்தான் மனிதர்!" என்றார் ஈசாப்.

தடுக்கி விழவைக்கும் கல்லைக் கண்டும், பேசாமல் சென்று குளித்துக் கொண்டிருந்தார்களே, அவர்களை மனிதர்கள் என்று சொல்ல விரும்பவில்லை ஈசாப்! இதையறிந்த எஜமானர் ஈசாப்பின் உயர்ந்த எண்ணத்தை மிகவும் பாராட்டினார்.

அந்தக் காலத்தில் அரசர்களுக்கு ஈசாப் பிடம் அதிக மரியாதை உண்டு. அவர்கள் தங்க ளது சபைகளுக்கு ஈசாப்பை சகல மரியாதைகளு டன் வரவேற்று உபசரிப்பார்கள். ஈசாப் மக்க ளுக்குள்ள குறைகளை அரசர்களிடம் கூறுவார். மக்களுக்காக அரசர்களுடன் வாதாடுவார். அவ ரது முயற்சியால் எவ்வளவோ நன்மைகள் ஏற் பட்டிருக்கின்றன.

மக்களின் நலம் கருதி வாழ்ந்த ஈசாப்பிற்கு, கடைசியில் மக்களாலேயே மரணம் ஏற்பட்டது என்று சொன்னுல், யாரும் நம்ப மாட்டார்கள். ஆனுல், அவருடைய வாழ்க்கைச் சரிதம் நமக்கு அப்படித்தான் கூறுகிறது.

ஒரு சமயம் டெல்பி என்ற இடத்தில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. பஞ்சத்தைப் போக்க, மக்க ளுக்கு நிறையத் தங்கம் கொடுக்கலாம் என்று நினைத்தான் கிரோசஸ் என்ற அரசன்.


உடனே அவன் ஈசாப்பை அழைத்து வரச் செய்தான். அவரிடம் ஏராளமான தங்கக் காசு களைக் கொடுத்தான். அவற்றைப் பஞ்சத்தால் அவதிப்படும் மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கச் சொன்னுன்.

ஈசாப் தங்கக் காசுகளுடன் அந்தப் பிரதே சத்திற்குச் சென்ருர். அரசனின் விருப்பப்படி அவர்களுக்குப் பகிர்ந்துகொடுக்க முயன்ருர். ஆனுல், சில பேராசைக்காரர்கள் எல்லாவற்றை

யும் தங்களிடமே கொடுத்துவிடும்படி நிர்ப்பந் தப்படுத்தினுர்கள். ஈசாப் எவ்வளவோ சமாதா னம் கூறிப் பார்த்தார்; அவர்கள் கேட்கவில்லே. ‘பொன் முட்டையிடும் வாத்து’ கதையைக்கூட அப்போதுதான் கூறினுராம். என்ன சொல்லியும் அவர்கள் இணங்கவில்லே. கலகம் செய்யத் தொடங்கினுர்கள்.

வேறு வழியின்றி, ஈசாப் தங்கக் காசுகளே அந்த அரசனுக்கே திருப்பி அனுப்பிவிட்டார். இதனுல் கோபம் கொண்ட அந்தப் பேராசைக் காரர்கள் ஈசாப்பைப் பிடித்துச் செங்குத்தான ஒரு மலேக்குக் கொண்டு சென்ருர்கள். மலேயின் உச்சியிலிருந்து அவரைக் கீழே உருட்டிவிட் டார்கள் அந்தப் பாவிகள்! உலகத்துக்காக உழைத்த உத்தமரின் உயிர் பிரிந்துவிட்டது!

ஈசாப்பின் கருத்துக்கள் சாகா வரம் பெற் றவை. அவரது கதைகள் இக்காலத்துக்கு மட்டு மல்ல; எக்காலத்துக்கும் பயன்தரக்கூடியவை.






# தேசீய கீதம் பாடியவர்

ஓர் ஊரில் ஒரு கிளி இருந்தது. எப்போது பார்த்தாலும், அது பழங்களைத் தின்று கொண்டும், 'கீச்கீச்' என்று கத்திக் கொண்டும் திரியும்.

அந்தக் கிளியைப் பார்த்தார் அந்த ஊர் அரசர். "சேச்சே, இந்தக் கிளியை இப்படியே விட்டு வைத்தால் ஆபத்து! கொஞ்ச நாளில் பழங்களுக்கே பஞ்சம் வந்துவிடும்! இதற்கு ஏதாவது படிப்புச் சொல்லிக் கொடுத்து வேறு வழியில் திருப்பவேண்டும்" என்று நினைத்தார். உடனே மந்திரிகளை அழைத்தார். 'இந்தக் கிளி மிகவும் மக்காக இருக்கிறது. இதற்குப் படிப்புக் கற்றுக் கொடுக்க இப்போதே ஏற்பாடு செய்யுங்கள்" என்று உத்தரவிட்டார்.



மந்திரிகள் பண்டிதர்களை அழைத்து, அவர்களுடன், "இந்தக் கிளிக்கு எப்படிப் பாடம் சொல்லிக் கொடுக்கலாம்" என்று யோசனை செய்தார்கள். கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதன்படி தங்கக் கூண்டு ஒன்றைச் செய்து, அதற்குள் கிளியைப் போட்டு அடைத்தார்கள். பெரிய மண்டபம் ஒன்றில் அதைக் கொண்டு போய் வைத்தார்கள். சுற்றிலும் பண்டிதர்கள் உட்கார்ந்து கொண்டார்கள்.

கிளிக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்காக ஆட்களை வைத்துப் புத்தகங்களை எழுதி எழுதிக்

குவித்தார்கள். 'பெரிய பண்டிதராக அந்தக் கிளி விளங்கப் போகிறது' என்று ஊரெல்லாம் பேசிக் கொண்டார்கள். எப்போது பார்த்தாலும், கிளிக் கூண்டைச் சுற்றிப் பெரிய கூட்டம் கூடியிருக்கும்.

ஒருநாள், அரசர் கிளியைப் பார்ப்பதற்காக மண்டபத்துக்குச் சென்றார். மண்டப வாசலில் மங்கல வாத்தியங்கள் முழங்கின. பண்டிதர்கள் உற்சாகத்துடன் மந்திரங்களை உரத்த குரலில் ஓதினார்கள்.

என்ன சொல்லிக் கொடுத்தும் பயன் இல்லை கிளிக்குத் தண்ணீரோ அல்லது தானியமோ கொடுக்கவில்லை. படிப்பு ஏறவேண்டுமே, அதற்காக ஏடுகளைத் துண்டு துண்டாக வெட்டி எழுத்தாணியின் முனையால் வாய்க்குள்ளே திணித்தார்கள். இப்படிச் செய்தால், கிளி எவ்வளவு காலம் உயிரோடிருக்கும் ?

தினமும் அரசர் கிளியைப் பற்றி விசாரிப்பார். அன்றும் வழக்கம்போல் விசாரித்தார். "கிளிக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியதையெல்லாம் ஒன்றுவிடாமல் சொல்லிக் கொடுத்து விட்டோம்" என்று பண்டிதர்கள் சொன்னார்கள்.

"கிளி நன்றாகப் படிக்கிறதா ? தாவுகிறதா ? கத்துகிறதா ? இரை தின்கிறதா ?" என்றெல்லாம் அரசர் கேள்வி மேல் கேள்விகள் கேட்டார். எல்

லாவற்றுக்கும், "இல்லை", "இல்லை" என்ற பதில் தான் வந்தது.

"அப்படியா ? உடனே அந்தக் கிளியைக் கொண்டு வாருங்கள், பார்க்கலாம்" என்றார் அரசர்.

கிளி கொண்டுவரப்பட்டது. அப்போது அது ஆடவில்லை; அசையவில்லை. அதற்கு மூச்சு இருந் தால் அல்லவா ஆடவோ அசையவோ செய்யும் ? பாவம், வயிற்றுக்குள் அவ்வளவு ஏடுகளையும் திணித்த பிறகு அது எப்படி உயிரோடிருக்கும் ?

—இந்தக் கதையை முதல் முதலாகக் கேட்ட வங்காளக் குழந்தைகள் அரசனுடைய முட்டாள் தனத்தை நினைத்து நினைத்துச் சிரித்தார்கள். இது அச்சாகி வெளிவந்தவுடன் குழந்தைகளோடு சேர்ந்து பெரியவர்களும் படித்துப் படித்துச் சிரித் தார்கள்.

ஏற்கெனவே இந்தக் கதை நம் நாட்டுக் குழந் தைகளுக்குத் தெரியுமோ, தெரியாதோ ! ஆனாலும், இதைச் சொன்னவர் பெயர் ஒவ்வொருவருக்கும் நிச்சயம் தெரிந்திருக்கும். இதில் ஐயமே இல்லை அவர் இயற்றிய ஒரு பாடலை ஒவ்வொரு நாளும் நம் தேசத்திலுள்ள கோடானு கோடி குழந்தை கள் உணர்ச்சியோடு பாடுகிறார்கள். 'ஜன கண மன அதிநாயக ஜயஹே' என்ற பாடலைப் பாடாத இந்தியக் குழந்தை உண்டா ? அதுதான் நமது தேசீய கீதமாக எங்கும் ஒலிக்கிறதே !

கவியரசர் தாகூர்தான் 'ஜன கண மன' இயற்றியவர் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அவர்தாம் 'பாடம் கேட்ட கிளி' என்ற கதையையும் சொன்னவர்!

தாகூர், அவருடைய அப்பா அம்மாவிற்குப் பதினான்காவது குழந்தையாகப் பிறந்தார். கடைசிக் குழந்தையும் அவர்தான்.

சிறுவயதில் கதை கேட்பதில் அவருக்கு அளவில்லாத ஆசை. அம்மாவை அவர் தொந்தரவு செய்யும் போதெல்லாம், "சித்தி, ரவியின் தொந்தரவு பொறுக்க முடியவில்லை. இவனுக்கு ஏதாவது கதை சொல்லேன்" என்று அவருடைய பாட்டியிடம் அம்மா சொல்லுவாள். உடனே பாட்டி, வெளி வராந்தாவில் உட்கார்ந்து தாகூருக்குக் கதை சொல்லத் தொடங்கிவிடுவாள். பாட்டியிடம் கதை கேட்டுக் கேட்டு, அவருக்கும் கதை சொல்ல வேண்டும் என்ற ஆசை பிறந்துவிட்டது. ஆனால், எப்படிச் சொல்லுவது?

தாகூர் வீட்டு வராந்தாவில் ஒரு பல்லக்கு இருந்தது. அது பாட்டி காலத்துப் பல்லக்கு! வர்ணமெல்லாம் மங்கி, உட்காரும் இடமெல்லாம் கிழிந்து கவனிப்பாரில்லாமல் கிடந்தது. தாகூர் ஓடிப்போய் அந்தப் பல்லக்கில் அடிக்கடி உட்கார்ந்து கொள்வார். நகராத அந்தப் பல்லக்கில் அவர் உட்கார்ந்ததும், அது நகர ஆரம்பித்துவிடும். 'விர்' ரென்று வானத்தில் பறக்கும். திடீரென்று ஒரு

தீவிலே போய் இறங்கும். அங்கிருந்து அழகான ஓர் ஊருக்குள்ளே புகுந்துவிடும். போகும் வழியி லெல்லாம் அவர் பல வீரதீரச் செயல்களைச் செய்து கொண்டே போவார். எல்லாம் கற்பனையில்தான் !

நாள் ஆக ஆக அவருடைய கற்பனை வளர்ந் தது. அருமையான கவிதைகளையும், கதைகளையும் எழுத அந்தக் கற்பனை அவருக்கு உதவியது.

தாகூர் பள்ளிக்கூடத்தில் போய்ச் சேர்ந்த தும், பாடப் புத்தகத்திலிருந்த ஒரு பாட்டை அவ ருக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். 'ஜால் படே, பத்தா நடே' என்று தொடங்கும் அந்தப் பாட்டு. 'சொட்டியது நீர்; சிலிர்த்தன இலைகள்' என்பது தான் அதன் பொருள். தாகூருக்கு அதைத் திரும் பத் திரும்பப் பாடுவதிலே ஓர் ஆனந்தம். கார ணம், அந்தப் பாடலில் உள்ள இனிய ஓசையே !

தாகூர் வீட்டிலே ஒரு கணக்குப்பிள்ளை இருந் தார். அவர் பெயர் கைலாசம். அவர் ஒரு நாள் வேடிக்கையாக ஒரு பாடல் எழுதினார். அதைத் தாகூரிடம் பாடிக் காட்டினார். அந்தப் பாட்டின் கதாநாயகன் யார் தெரியுமா ? தாகூர்தான்! ஆம் தாகூரைக் கதாநாயகனாக வைத்தே அவர் அப் பாடலை எழுதியிருந்தார். அத்துடன், தாகூருக்கு ஏற்ற ஒரு கதாநாயகியையும் அந்தப் பாட்டிலே வரச் செய்தார். அவளுடைய அழகையும் ஆடை அலங்காரத்தையும் பற்றி மிகவும் நன்றாக அவர் வர்ணித்திருந்தார். தாகூருக்கு அந்தப் பாட்டிலே

மிகவும் பிடித்தது அதிலுள்ள எதுகை, மோனை, சந்தம்—இவைகள் தாம்.

தாகூருக்கு அப்போது எட்டு வயது இருக்கும். அவருடைய உறவினர் ஒருவர் தாகூரிடம், "ரவி, நன்ருகப் பாடுகிருயே, நீயே ஒரு பாட்டுக் கட்டிப் பாரேன்" என்ருர்.

தாகூர் பாட்டு எழுதுவது மிகவும் சிரமம் என்று நினைத்தார். ஆனுலும், 'எழுதித்தான் பார்ப்போமே' என்று நினைத்து, எப்படியோ தட்டுத் தடுமாறி ஒரு சிறு பாட்டை எழுதி முடித்தார்; தாமரையைப் பற்றியதே அந்தப் பாட்டு.

அதிலிருந்து தாகூருக்குப் பாட்டு எழுத வேண்டுமென்ற ஆசை பிறந்தது. அவ்வப்போது ஒரு சில பாடல்களை எழுதி வந்தார். ஆனுலும், அவர் பாட்டு எழுதுவார் என்பது அவருடைய பதினேராவது வயதில்தான் பலருக்கும் தெரிந்தது.

தாகூரின் பள்ளித்தலைவர் கோவிந்தபாபு ஒரு நாள் தாகூரை அழைத்து, "ரவி, நீ பாட்டு எழுது வாயாமே!" என்று கேட்டார். தாகூர் தயக்கத்துடன் "ஆமாம்" என்ருர்.

"சரி, நீ நாளை ஒரு பாட்டு எழுதிக் கொண்டு வா" என்று சொன்னுர்.

தாகூர் மறுநாள் ஒரு பாடலை எழுதிக் கொண்டு போனுர். கோவிந்தபாபு அதைப் படித்

துப் பார்த்தார். அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. உடனே தாகூரை அழைத்துக் கொண்டுபோய், மாணவர்களுக்கு முன்னுல் பாடிக் காட்டச் சொன்னுர். ஆனுல் பலர், "இந்தப் பாட்டை ரவி இயற்றியிருக்க மாட்டான்; யாரோ எழுதிய பாட்டை இவன் திருடி, தான் எழுதியதாகச் சொல்லுகிருன்!" என்றுர்கள். ஆனுல், அவர்கள் சந்தேகம் விரைவில் தீர்ந்துவிட்டது. எந்தப் பொருளைக் கொடுத்தாலும், அதை வைத்துக் கவிதை எழுதும் திறமை அவருக்கு இருப்பதை அவர்கள் நேரிலே உணர்ந்தார்கள்.

தாகூர் அப்போது எழுதிய பாடலை ஒருவர் மிகவும் இனிமையான குரலில் தாகூரின் அப்பாவிடம் பாடிக் காட்டினுர். அதைக் கேட்டு அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

தாகூர் இளம் வயதிலே, 'ஞானுங்குரம்' என்ற மாதப் பத்திரிகையில் தொடர்ந்து கவிதைகளை எழுதி வந்தார். ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதினுர். பிறகு, தமது அண்ணு ஆரம்பித்த 'பாரதி' என்ற பத்திரிகையிலும் அடிக்கடி எழுதி வந்தார்.

அப்போது ஒரு வேடிக்கை நடந்தது.

தாகூர் வைஷ்ணவப் பாடல்கள் பலவற்றைக் கேட்டார். அவற்றைக் கேட்கக் கேட்க, அவற்றைப் போலவே பல பக்திப் பாடல்களை எழுத வேண்டுமென்ற ஆசை அவருக்குத் தோன்றியது.

அவ்வாறே பல பாடல்களை எழுதினார். எழுதிய பிறகு, அவற்றை ஒரு பெரியவரிடம் கொண்டு போய்க் காட்டி, "இந்தப் பாடல்கள் மிக மிகப் பழைய ஒரு புத்தகத்தில் இருந்தன. அப்படியே பார்த்து எழுதிக் கொண்டு வந்தேன். படித்துப் பாருங்கள். எப்படியிருக்கின்றன?" என்று கேட்டார்.

அவர், பாடல்களைப் படித்துப் பார்த்தார். "ஆஹா! எவ்வளவு நன்றாக இருக்கின்றன!" என்றார்.

உடனே தாகூர் சிரித்தார். "ஏன் சிரிக்கிறாய்?" என்று கேட்டார் அவர்.

"ஒன்றுமில்லை. விளையாட்டுக்காகச் சொன்னேன். இந்தப் பாடல்களை நானேதான் எழுதினேன்" என்றார் தாகூர்.

இதைக் கேட்டதும், அந்த மனிதர், "அது தானே பார்த்தேன். பாடல்கள் அப்படி ஒன்றும் பிரமாதமாயில்லையே!" என்றார்.

அதற்குப் பிறகு, தாகூர் அந்தப் பாடல்களை 'பாரதி'யில் தொடர்ந்து வெளியிட்டு வந்தார். ஆனால், அவர் தம் சொந்தப் பெயரில் அவற்றை வெளியிடவில்லை; 'பானு சிங்கா' என்ற பழங் காலக் கவிஞர் ஒருவரின் பெயரில்தான் வெளியிட்டார்.

அந்தப் பாடல்களை அறிஞர்களெல்லாம் படித்தனர்; மிகவும் பாராட்டினர். ஆனால், அவற்றை பானு சிங்கா என்பவர் எழுதியதாகவே அனைவரும் நினைத்தார்கள்.

ஜெர்மனியில் படித்துக் கொண்டிருந்த நிஷிகாந்த் சட்டர்ஜி என்பவர் அந்தப் பாடல்களைப் பற்றி ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி, டாக்டர் பட்டம்கூடப் பெற்றுவிட்டார்!

தாகூர் சிறுவராயிருக்கும் பொழுது இராமாயணத்தை எடுத்து வைத்துக்கொண்டு அழகாகப் பாடுவார். மிகவும் துக்கமான இடங்களைப் பாடும் போது, அவருக்குக் கண்ணீர் வந்துவிடும். எத்தனையோ தடவைகள் அவர் அப்படிக் கண்ணீர் விட்டிருக்கிறார். அவர் கண்ணீர் விடுவதைக் காண அவருடைய பாட்டிக்குப் பொறுக்காது. உடனே அவர் கையிலிருக்கும் புத்தகத்தைப் பறித்து அறைக்குள் கொண்டு போய் வைத்துவிடுவாள்.

தாகூரையும் அவருடைய சகோதரர்களையும் சிறுவயதிலே அவர்கள் வீட்டு வேலைக்காரர்கள் படுத்திய பாடு கொஞ்ச நஞ்சமன்று. சிறுவர்களையெல்லாம் வேலைக்காரர்கள் மேற்பார்வையில் விட்டுவிட்டுப் பெரியவர்கள் வெளியே சென்று விடுவார்கள். அப்போது, அந்த வேலைக்காரர்கள் வைத்ததுதான் சட்டம்!

சியாமா என்று ஒரு வேலைக்காரன் இருந்தான். அவன் தாகூர் இருக்கும் இடத்தைச் சுற்றி

வட்டமாக ஒரு கோடு போடுவான். போட்டு விட்டு, "இதைத் தாண்டி நீ போகக் கூடாது. போனுல் ஆபத்து!" என்பான். இராமாயணத்



தில் இலக்குமணன் போட்ட கோட்டைத் தாண்டியதால்தானே சீதை இராவணனிடம் அகப் பட்டுக் கொண்டாள்? அந்தக் கதை தாகூருக்குத் தெரியுமாதலால் பயந்துபோய் அந்தக் கோட்டுக் குள்ளே இருப்பார். அங்கிருந்தபடியே சுற்றிலும் உள்ள மரம் செடி கொடிகளையும், பறவைகளையும் பார்த்துப் பார்த்து ஏதாவது கற்பனை செய்து கொண்டிருப்பார். அதுவும் நன்மைக்குத்தான்!

ஒரு சமயம் ரமேச சந்திர தத்தர் என்பவர் வீட்டில் திருமணம் நடந்தது. அதற்கு ரவீந்திரர்

சென்றார். அவர் போன அதே சமயம் புகழ்பெற்ற வங்காள நாவலாசிரியர் பங்கிம் சந்திர சட்டர்ஜியும் வந்தார். அவருக்கு மாலை போட்டு மரியாதையுடன் வரவேற்பதற்காக ரமேச சந்திரர் ஒரு மாலையை எடுத்துக்கொண்டு அவர் அருகில் வந்தார். பங்கிம் சந்திரர் தமக்குப் போடுவதற்காகக் கொண்டுவந்த மாலையைக் கையிலே வாங்கி, அருகில் நின்று கொண்டிருந்த தாகூர் கழுத்திலே போட்டுவிட்டு, "ரமேஷ், ரவீந்திரனுக்குத்தான் இந்த மாலை சேர வேண்டும். நீங்கள் ரவீந்திரனின் 'மலைப் பாக்கள்' படித்திருக்கிறீர்களோ?" என்று மகிழ்ச்சி பொங்கக் கேட்டார். பங்கிம் சந்திரர் போன்ற ஒரு பேரறிஞரின் பாராட்டுக் கிடைத்ததை நினைத்து தாகூர் பூரிப்படைந்தார். திருமணத்திற்கு வந்திருந்தவர்கள் அனைவரும் ரவீந்திரரை வியப்புடன் பார்த்தார்கள்.

தாகூருக்குப் பள்ளிப் படிப்பு என்றாலே பாகற்காயாகக் கசந்தது! இதற்குத் தகுந்த காரணம் இருந்தது. ஞாயிற்றுக் கிழமைதான் அவருக்குச் சிறிது ஓய்வு கிடைக்கும். மற்ற நாட்களிலெல்லாம் விடிந்தது முதல் விளக்கு வைத்த பிறகுகூடப் படிப்பு அவரை விடுவதில்லை. எந்நேரமும் படிப்பு, படிப்பு, படிப்புத்தான்!

"எத்தனை பேரோ காய்ச்சல், குளிர் என்று பள்ளிக்கூடம் வராமல் இருக்கிறார்களே! நமக்கும் அப்படி ஒரு காய்ச்சல் வரக்கூடாதா?" என்று தாகூர் அக்காலத்தில் நினைப்பாராம். குளிர் காலத்

தில் திறந்த வெளியில் படுத்துத் தூங்குவாராம். தண்ணீரில் இறங்கி வெகு நேரம் ஆட்டம் போடுவாராம். என்ன செய்தும் அவரை எவ்வித நோயும் அணுகவில்லை!

பள்ளிக்கூடம் ஒரு சிறைச் சாலையாகவே அப்போது அவருக்குத் தோன்றியது. 'குழந்தைகளுக்கு நல்ல முறையில் அவர்கள் மகிழ்ச்சி அடையும் வகையில் எப்படிக் கல்வி அளிக்கலாம்' என்று பிற்காலத்தில் அவரைச் சிந்தனை செய்யத் தூண்டியதே இந்த அனுபவம்தான். அந்தச் சிந்தனையில் தோன்றியதுதான் 'சாந்தி நிகேதனம்' என்ற கல்விக் கூடம்.

ஐந்து பிள்ளைகளுடன் ஆரம்பமான அந்தக் கல்வி நிலையம் இன்று 'விஸ்வ பாரதி' என்னும் பெயரில் உலகம் புகழும் பல்கலைக் கழகமாக விளங்குகிறது.

ஆரம்ப காலத்தில் தாகூரும் அவர் மனைவி மிருணாளினி தேவியாரும் அந்தக் கல்வி நிலையத்தை நடத்துவதற்கு எவ்வளவோ பாடுபட்டார்கள். அப்போது பண நெருக்கடி அதிகம். மிருணாளினி தேவியார் தம்முடைய நகைகளையெல்லாம் விற்றுப் பண உதவி செய்தார்.

தாகூர் எழுதிய பல பாடல்களை அவரே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வைத்திருந்தார். 1912-ஆம் ஆண்டு இங்கிலாந்துக்குச் சென்ற

போது, அங்கிருந்த சில நண்பர்களிடம் அவற்றைப் படித்துக் காட்டினர். அவர்கள் அப்பாடல்களை மிகவும் பாராட்டினார்கள். 'கீதாஞ்சலி' என்ற பெயரில் அப்பாடல்களை உடனே அவர் வெளியிட்டார். அதற்கு 1913-ஆம் ஆண்டு நோபல் பரிசு கிடைத்தது. அதற்கு முன் ஆண்டுதோறும் ஐரோப்பியர்களுக்கே அப்பரிசு கிடைத்து வந்தது. ஆசியாக்காரருக்கு நோபல் பரிசு கிடைத்தது அதுவே முதல் தடவை. பரிசாகக் கிடைத்த 8000 பவுனையும் அவர் சாந்தி நிகேதனத்துக்கே கொடுத்துவிட்டார்!


தாகூர் எதை எழுதினாலும், அதை அவரே பலரிடமும் படித்துக் காட்டுவார். மாலை நேரங்களில் சாந்தி நிகேதன மாணவர்களையும் நண்பர்களையும் கூட்டி வைத்துக்கொண்டு தமது இனிய குரலில் படிப்பது வழக்கம். தாம் எழுதியிருப்பதை மற்றவர்கள் எப்படி ரசிக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளவே அவர் இப்படிச் செய்வார்.

தாகூர் குழந்தைகளுக்காக 'பிறைமதி' என்ற தலைப்பில் பல பாடல்கள் எழுதியிருக்கிறார். எல்லாமே உள்ளத்தைக் கவரக்கூடியவை. குழந்தைகளுக்காக அவர் கதைகளும் பாடல்களும் எழுதியதோடல்ல; பெரியவர்களுக்காக எழுதிய கதைகளிலும், கவிதைகளிலும்கூடக் குழந்தை உள்ளத்தை நன்கு படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்.

தாகூர் எண்பது ஆண்டுகள் வாழ்ந்தார்.

அவரது நூறுவது பிறந்த நாளை இந்தியா மட்டு மல்ல; உலகம் முழுவதுமே கோலாகலமாகக் கொண்டாடியது.

இத்தகைய ஒரு சிறந்த கவிஞர் பிறந்த நாட்டிலே நாமும் பிறந்திருக்கிறோம். இது நமது அதிர்ஷ்டமல்லவா ?






சின்ட்ரல்லா மிகவும் நல்ல பெண். அவளுக்கு அம்மா இல்லை. அப்பா இரண்டாந்தாரம் கல்யாணம் செய்துகொண்டிருந்தார். அந்த மாற்றுந் தாய் மிகவும் பொல்லாதவள். அவளுக்கு இரண்டு பெண்கள் இருந்தார்கள். அம்மாவைப் போலவே அவர்களும் பொல்லாதவர்கள் ; பொறாமைக் காரிகள் !

சின்ட்ரல்லாவை ஒரு வேலைக்காரியைப் போலவே அவர்கள் நடத்திவந்தார்கள். அதி காலையில் எழுந்தால், இரவு வெகு நேரம்வரை வேலை இருந்து கொண்டே யிருக்கும். பம்பரம் போல் ஓடி ஆடி வேலை செய்வாள். சகோதரிகள்

இருவரும் வேளா வேளைக்குச் சாப்பிட்டுவிட்டுச் சுகமாகத் தூங்குவார்கள்.

அன்று ஒருநாள், அரண்மனையில் ஒரு பெரிய விருந்து நடந்தது. விருந்து, ஆடல் பாடல் எல்லாம் தடபுடலாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அந்த விழாவிற்கு சின்ட்ரல்லாவின் இரண்டு சகோதரிகளும் விலையுயர்ந்த ஆடைகளையும், நகைகளையும் அணிந்து கொண்டு புறப்பட்டார்கள். ஆனால், சின்ட்ரல்லாவை அவர்கள் 'அரண்மனைக்கு வருகிறாயா?' என்றுகூடக் கேட்கவில்லை!

சின்ட்ரல்லாவுக்குத் துக்கம் தாங்கமுடியவில்லை. விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள். அப்போது திடீரென்று ஒரு குரல் கேட்டது. "சின்ட்ரல்லா, கவலைப்படாதே. நீயும் போகலாம்" என்றது அந்தக் குரல். உடனே, சின்ட்ரல்லா நிமிர்ந்து பார்த்தாள். எதிரே ஒரு தேவதை நின்று கொண்டிருந்தது!

சின்ட்ரல்லா அழுகையை நிறுத்தினாள்; ஆவலோடு தேவதையைப் பார்த்தாள்! "சின்ட்ரல்லா, உனக்கு உதவவே நான் வந்திருக்கிறேன். நான் சொல்லுவதுபோல் செய். முதலில் ஒரு பூசனிக்காய் வேண்டும். கொண்டுவா" என்றாள்.

"இதோ கொண்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு, சின்ட்ரல்லா தோட்டத்தை நோக்கி ஓடி

ஞள். ஒரு பெரிய பூசனிக்காயைக் கொண்டு வந்து தேவதையின் முன்ஞல் வைத்தாள். தேவதை தன் கையிலிருந்த மந்திரக் கோலிஞல் அந்தப் பூசணிக்காயைத் தொட்டது. மறுவிநாடி பூசனிக்காய் ஓர் அருமையான கோச்சு வண்டியாக மாறிவிட்டது! கோச்சு வண்டிமட்டும் இருந்தால் போதுமா? அதை இழுத்துச் செல்லக் குதிரைகள் வேண்டாமா? ஓட்டுவதற்கு ஆட்கள் வேண்டாமா?

அங்கே இருந்த எலிப் பொறியில் ஆறு சுண்டெலிகள் இருந்தன. அந்த ஆறு எலிகளையும் அழகிய குதிரைகளாக மாற்றிவிட்டது அத் தேவதை! பிறகு குறுக்கும் நெடுக்குமாக ஓடிக் கொண்டிருந்த மூன்று எலிகளை கோச்சு வண்டிக் காரர்களாக மாற்றியது. ஒருவன் வண்டியை ஓட்டுவதற்கு; இருவர் பின்ஞல் காவலுக்கு!

சின்ட்ரல்லாவுக்கு எல்லையில்லாத மகிழ்ச்சி. உடனேயே அந்த வண்டியில் ஏறி அரண்மனைக் குச் செல்ல வேண்டும் என்று அவள் நினைத்தாள். ஆஞல், நல்ல உடை வேண்டுமே!

"சின்ட்ரல்லா, எங்கே உன் கண்களைச் சிறிது நேரம் மூடிக்கொள்" என்று சொன்னது தேவதை. சின்ட்ரல்லா தன் இரு கண்களையும் மூடிக்கொண்டாள். சில விநாடிகளானதும், "இப்போது கண்களைத் திறக்கலாம்" என்றது தேவதை.

சின்ட்ரல்லா கண்களைத் திறந்து பார்த்தாள். என்ன ஆச்சரியம்! அவள் உடம்பில் 'பளபள' என்று மின்னும் பட்டாடை இருந்தது! அவ்வளவு அழகான உடையை அவள் அதற்கு முன்பார்த்





ததே இல்லை. கால்களைப் பார்த்தாள். கண்ணைக் கவரும் இரண்டு கண்ணாடிச் செருப்புகள் இருந் தன !

"நேரமாகிறது. புறப்படு. ஆனால் ஒன்று மட்டும் நினைவில் இருக்கட்டும். இரவு மணி 12 அடிப்பதற்கு முன்பு நீ வீட்டுக்குத் திரும்பிவிட வேண்டும்" என்று கூறி சின்ட்ரல்லாவைத் தேவதை வழியனுப்பி வைத்தது.

சின்ட்ரல்லா அரண்மனைக்கு வந்தாள். அவளைப் பார்த்ததும் இளவரசருக்கு அவள் மேல் பிரியம் ஏற்பட்டது. ஆங்கிலேயர் வழக்கப்படி அவளுடன் சேர்ந்து நடனம் ஆடினார். ஆடல் பாடல்களில் நேரம் போனதே தெரியவில்லை. தற்செயலாக சின்ட்ரல்லா அங்கிருந்த கடிகாரத்தைப் பார்த்தாள். "ஆ! மணி பன்னிரண்டு அடிக்கப் போகிறதே!" என்று கூறிக்கொண்டே, திடீரென்று அந்த இடத்தைவிட்டு ஒரே ஓட்டமாக ஓடினாள். ஓடிய வேகத்தில், அவள் காலில் அணிந்திருந்த ஒரு செருப்பு அங்கே விழுந்துவிட்டது. அவள் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. காற்றாய்ப் பறந்து அரண்மனைக்கு வெளியே வந்தாள்.

அவள் வெளியே வருவதற்கும், கடிகாரம் 'டாண்', 'டாண்' என்று மணி அடிப்பதற்தும் சரியாக இருந்தது. அதே சமயம், அங்கு நின்ற—அவள் ஏறிவந்த கோச்சும், இழுத்து வந்த குதிரைகளும், ஓட்டி வந்த ஆட்களும் மறைந்து விட்டனர். பூசனிக்காயும் எலிகளுமே அங்கிருந்தன! அத்துடன் போயிருந்தாலும் பரவாயில்லையே! அவள் அணிந்திருந்த உயர்ந்த ஆடைகளும் மறைந்து விட்டன! வழக்கமாக அவள் உடுத்தும் கிழிந்த துணிதான் உடம்பில் ஒட்டிக்கொண்டிருந்தது.

சின்ட்ரல்லா அழுதுகொண்டே வீட்டுக்கு வந்தாள். தொடர்ந்து அழுதுகொண்டே இருந்தாள். இரவு வெகு நேரம் சென்று வீட்டுக்குத் திரும்பி வந்த சகோதரிகள், சின்ட்ரல்லா அழுவ

தைப் பார்த்துச் சிரித்து மகிழ்ந்தார்கள். சின்ட்ரல்லா அரண்மனைக்குச் சென்று, திரும்பி வந்தது அவர்களுக்கு எப்படித் தெரியும் ?

மறுநாள் காலையில் அரண்மனைச் சேவகன் ஒருவன் ஒரு குழாயை வாயில் வைத்துக் கத்திக் கொண்டே தெருவில் சென்றான். அவன் கையில் ஒரு கண்ணாடிச் செருப்பு இருந்தது.

"எந்தப் பெண்ணின் காலுக்கு இந்தச் செருப்புச் சேருகிறதோ அந்தப் பெண்ணை இளவரசர் மணந்து கொள்ளப் போகிறார். கட்டாயம் மணந்து கொள்ளப் போகிறார்" என்று அவன் அறிவித்தான்.

உடனே ஒவ்வொரு வீட்டுக்குள்ளிருந்தும் கலியாணமாகாத பெண்கள் ஓடிவந்தார்கள். அந்தச் செருப்பை வாங்கி அணிந்து பார்த்தார்கள். ஒருவர் காலுக்கும் அது சேரவில்லை. சின்ட்ரல்லா சகோதரிகள் மட்டும் சும்மா இருப்பார்களா? அவர்களும் ஆசைஆசையாக அந்தச்செருப்பை வாங்கிப் போட்டுப் பார்த்தார்கள்; சேரவில்லை. சிறியதாயிருந்தது. எப்படியாவது சேர்த்துவிடவேண்டுமென்று முயன்று பார்த்தார்கள்; முடியவில்லை.

அந்தச் சமயம் சின்ட்ரல்லா அங்கே வந்தாள். கண்ணாடிச் செருப்பைப் பார்த்ததும் அவளுக்கு விஷயம் புரிந்துவிட்டது. உடனே அவள், "எங்கே அதைக் கொடுங்கள். நான் போட்டுப் பார்க்கிறேன்" என்றாள்.

இதைக் கேட்டதும், அவளது சகோதரிகள் இருவரும் கேலி செய்தார்கள்; கிண்டல் செய்

தார்கள். சின்ட்ரல்லா அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. கண்ணாடிச் செருப்பை வாங்கிக் காலில் அணிந்து பார்த்தாள். கச்சிதமாக இருந்தது!

'அடே, இவளுக்குச் சரியாக இருக்கிறதே!' என்று வயிற்றெரிச்சலுடன் முணுமுணுத்தார்கள் சகோதரிகள்.

"ஆஹா! நான் வந்த காரியம் வெற்றி!" என்றான் அரண்மனைச் சேவகன்.

அப்புறம்......?

அப்புறம் என்ன? சின்ட்ரல்லாவுக்கும், இளவரசருக்கும் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

—இந்தக் கதையில் வரும் 'சின்ட்ரல்லா' என்ற பெயர் உலகம் முழுவதும் தெரிந்த பெயராகி விட்டது.

இந்தக் கதையைப் பற்றி ஒரு கதை உண்டு. பிரெஞ்சு தேசத்தில் 'பியரி' என்று ஒரு சிறுவன் இருந்தானாம். அவன் தன் அப்பாவான சார்லஸ் பெரால்ட் (Charles Perrault) என்பவரிடம் இந்தக் கதையையும், வேறு சில கதைகளையும் சொன்னானாம். அவர் அந்தக் கதைகளையெல்லாம் மகிழ்ச்சியோடு கேட்டாராம். தாம் கேட்ட கதைகளைக் குழந்தைகள் விரும்பும் வகையில் அழகாக எழுதி வெளியிட்டு விட்டாராம்!

'சின்ட்ரல்லா' கதையைப் போலவே, இதுவும் ஒரு கட்டுக் கதை என்று பலரும் கருதுகிறார்கள். 'பெரியவர் ஒருவர் சொன்ன கதை' என்று சொல்

வதைவிட, 'சிறுவன் ஒருவன் சொன்ன கதை' என்றால் சிறுவர்கள் மிகவும் விரும்பிப் படிப்பார்களல்லவா? அதற்காகத்தான் இப்படி ஒரு கதை கட்டி விட்டார்களோ என்னவோ!



ஆயினும், இந்தக் கதையை இன்று உலகத்துக் குழந்தைகளெல்லாம் படித்து மகிழும்படி செய்த சார்லஸ் பெரால்ட் என்பவரை நாம் மறந்து விடலாமா?

பதினேழாம் நூற்றாண்டிலே பிரெஞ்சு தேசத்தில் நாடோடிக் கதைகளுக்கும், தேவதைக் கதைகளுக்கும் நல்ல கிராக்கி ஏற்பட்டது. இந்தியாவிலிருந்தும், பாரசீகத்திலிருந்தும்கூடப் பல கதைகளைத் திரட்டிச் சென்றார்கள். அவற்றையெல்லாம் பிரெஞ்சு மக்கள் ஆவலாய்க் கேட்டார்கள். சொல்லச் சொல்ல அந்தக் கதைகளுக்கு மெருகு ஏறியது. கேட்கக் கேட்க மக்களுக்கு இன்பம் பெருகியது. ஒருவரைவிட ஒருவர் அந்தக் கதைகளைச் சிறப்பாகச் சொல்லத் தொடங்கினார்கள். இதில் பலத்த போட்டியும் ஏற்பட்டது.

பிரெஞ்சு மக்கள் பொதுவாகவே கலை உணர்ச்சி நிறைந்தவர்கள். அதனால், அவர்கள் இதுபோன்ற கதைகளை மிகவும் விரும்பிக் கேட்டார்கள். மக்களின் இந்த விருப்பத்தை நன்கு புரிந்துகொண்டார் பெரால்ட். அப்போதுஅவருக்கு எழுபது வயதிருக்கும். 'நாம் கேள்விப்பட்ட தேவதைக் கதைகளைக் குழந்தைகளுக்கு ஏற்றபடி எழுதி வெளியிட்டால், எத்தனையோ குழந்தைகள் படித்து இன்புறுவார்களே!' என்று நினைத்தார். சில கதைகளை எழுதினார். அந்தக் கதைகள் எல்லாமே இன்று உலகப் புகழ் பெற்றுவிட்டன!

பெரால்ட், பாரிஸ் நகரத்தில் 1628-ஆம் ஆண்டு பிறந்தார். அவருடைய தகப்பனார் ஒரு பாரிஸ்டர். அவருடன் கூடப் பிறந்தவர்கள் மூவர். அவர்தான் கடைக்குட்டி. நால்வரும் நன்கு படித்தவர்கள். எல்லாருமே நல்ல உத்தியோகத்தில் இருந்தார்கள்.

பெரால்ட் சட்டப் படிப்புப் படித்துத் தேறிய

வர். ஆனால், சில ஆண்டுகள்தான் வக்கீல் தொழில் நடத்தினார். பிறகு, அவருடைய தலைய ஞர் ஒருவருக்கு உதவியாகச் சிலகாலம் வேலை பார்த்தார்.

பெரால்ட் மக்களின் மன உணர்ச்சிகளை நன்கு அறிந்தவர். இது பற்றி அவர் பல ஆராய்ச்சிகள் செய்து பார்த்தவர்.

பெரால்ட் கடைசி காலத்தில்தான் குழந்தைக் கதைகளை எழுதினார். ஆரம்ப காலத்தில் பெரியவர் களுக்காகப் பல கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுதிப் புகழ் பெற்றார்.

ஒரு சமயம் அவர் ஒரு கவிதை எழுதினார். அதனால் ஒரு பெரிய சண்டையே கிளம்பிவிட்டது. பழமையைப் போற்றுகிறவர்களுக்கும் புதுமை யைப் பாராட்டுகிறவர்களுக்கும் தகராறு ஏற்பட் டது. இந்தச் சண்டை பிரெஞ்சு தேசத்தில் மட்டும் நடைபெறவில்லை; இங்கிலாந்திற்கும் பரவலானது. இதனால், அவரது பெயர் எங்கும் தெரிய வாய்ப்பு ஏற்பட்டது.

பெரால்ட் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந் தார். பிரெஞ்சு அரசாங்க மாளிகைகளையெல்லாம் அவர்தாம் நிர்வாகம் செய்துவந்தார். பிரெஞ்சு இலக்கியக் கழகத்திலே அவர் ஒரு முக்கிய அங்கத் தினராக விளங்கினார். அக்கழகத்தில் நடக்கும் தேர்தல்களில் இரகசிய வாக்கு அளிக்கும் முறையை அவர்தாம் முதலில் ஏற்படுத்தினார்.

பெரியவர்களுக்காகவே எழுதி வந்த பெரால்ட்

வருங்காலத்தில் பெரியவர்களாகப் போகும் குழந்தைகளை நினைத்துப் பார்த்தார். 'பெரியவர்களான பின் நல்ல இலக்கியங்களைப் படிக்க வேண்டுமானல், இப்போதே அவர்களைத் தயார் செய்ய வேண்டும்' என்று எண்ணிஞர். பிறகுதான் குழந்தைகளுக்கு எழுதத் தொடங்கிஞர்.

பெரியவர்களுக்காகவே எழுதிவந்த பெரால்ட் திடீரென்று குழந்தைகளுக்காக எழுதத் தொடங்கியதும் பலர் கேலி செய்தார்கள். "அர்த்தமில்லாத கதைகளையெல்லாம் எழுதுகிருரே!" என்று கூறி ஏளனம் செய்தார்கள். ஆயினும், அவர் குழந்தைகளுக்கு எழுதுவதை நிறுத்தவில்லை; தொடர்ந்து எழுதிக்கொண்டே இருந்தார்:

அவரது நல்ல எண்ணமும், விடாமுயற்சியும் வீண் போகவில்லை. அவர் படைத்த பாத்திரங்கள் இன்று குழந்தைகளின் உள்ளங்களில் நிலையான இடம் பெற்றுவிட்டன!

